## **ST JOHN CADET –** புனித ஜோன் கெடெட்

### கெடெட் நிகழ்ச்சியை நடாத்தும் விதம் பற்றிய அறிவுரைகள்

**1. தகைமை :**

வயது 12 – 18 க்கும் இடைப் பட்டவர்களாயிருத்தல் வேண்டும்.

எமது நிறுவனத்தினால் நடாத்தப்படும் முதலுதவி பயிற்சியினைப் பெற்று பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

பெற்றோரின் அனுமதி, எழுத்து மூலமாக கிடைக்கப் பெற வேண்டும்.

நிறுவனத்தின் சட்ட திட்டங்களுக்கு ஏற்ப செயல்படுவதற்கான இணக்கப்பாடு வேண்டும்.

**2. சீருடை :**

பாடசாலை குழுக்கள் தமது விருப்பத்தின் படி விரும்பிய ஓர் இடத்தில் நாம் குறிப்பிட்டுள்ள விதத்தில் சீருடைகளை ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.

சீருடைகளுக்கான சின்னங்கள் மற்றும் ஏனைய பாகங்கள் மாவட்ட ஆணையாளர் மூலம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

சீருடை தொடர்பான விபரங்களை பிரதேச உத்தியோகத்தர்களிடமிருந்து / பிரதான காரியாலயத்திலிருந்து / சீருடை தொடர்பான கைநூலிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

**3. பதிவு செய்தல் :**

குழுவை பதிவு செய்வதற்கான BF/CD/19/01 படிவத்தையும், பெயர்பட்டியலை நிரப்புவதற்கான BF/CD/19/02 என்ற படிவத்தையும் பூர்த்தி செய்து மாவட்ட ஆணையாளர் மூலமாக பிரதான காரியாலயத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

**குழு வகைப் படுத்துதல்**

1. பிரதான குழு – பாடசாலை அல்லது நிறுவனத்தின் பெயரைக் கொண்டிருக்கும்
2. உப குழு - ஆகக் கூடிய அங்கத்தவர்கள் 25 பேர் ஆகும். சாஜன்ட் ஒருவரும், கோப்ரல் மூவரும் உட்பட.
3. உப குழு - அங்கத்தவர்களின் எண்ணிக்கை 25 பூர்த்தியடையாமல் அடுத்த உப குழுவை பதிவு செய்ய முடியாது.

   ஒரு உப குழு ஆரம்பிக்கப்பட்ட பின், மீண்டும் மீண்டும் புதிய அங்கத்தவர்களை சேர்த்துக் கொள்ள முடியும். அடுத்த உப குழு ஆயத்தமாகும் வரை புதிய அங்கத்தவர்கள் தற்காலிக அங்கத்துவத்தடன் செயல்பட முடியும். தற்போதுள்ள உப குழுவில் வெற்றிடங்கள் ஏற்படுமாயின் தற்காலிக அங்கத்தவர்களைக் கொண்டு வெற்றிடங்களை நிரப்ப முடியும்.

**4. அங்கத்தவராகுதல் :**

அங்கத்தவராவதற்கு, சத்தியபிரமாணம் செய்யும் வைபவம் ஒன்று நடாத்தப்பட வேண்டும். அனைத்து அங்கத்தவர்களும் உரிய சீருடை அணிந்து, எமது உத்தியோகத்தர் ஒருவரின் முன்னிலையில் நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சத்தியபிரமாணத்தை செய்ய வேண்டும். சத்தியபிரமாணம் செய்த நாள் அங்கத்துவம் பெற்ற நாளாக பதியப்படும். இந்த வைபவத்தை ஏற்பாடு செய்தல் தொடர்பான விபரங்களை பிரதேச உத்தியோகத்தரிடம் அல்லது பிரதான காரியாலயத்திலிருந்து அறிந்து கொள்ள முடியும்.

**5. அங்கத்தவரின் தகவல்களைப் பராமரித்தல் :**

கிட்டி மற்றும் கெடெட் அங்கத்தவர்களுக்கான பதிவுப் புத்தகத்தை (Cadet Record Book) நடைமுறைப் படுத்துவதுடன் வருடாந்தம் BF 4 படிவத்தைப் பூர்த்தி செய்து இற்றைப் படுத்த வேண்டும்.

**6. அங்கத்தவராக செயல்படுதல் :**

கெடெட் நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்கு பெற்றோரின் அனுமதி, அதிபரின் அனுமதி, மற்றும் விசேட சந்தர்பங்களில் கல்வித் திணைக்கலத்தின் எழுத்து மூல அனுமதி அவசியமாகும்.

எல்லா நிகழ்ச்சிகளிலும் பங்கேற்கும் போது சேவை குறிப்பு புத்தகம் நடைமுறை படுத்தல் கட்டாயமான காரியமாகும். சேவை குறிப்பு புத்தகத்தின் மாதிரி ஒன்றை பிரதேச உத்தியோகத்தரிடமிருந்து அல்லது பிரதான காரியாலயத்திலிருந்து பெற்றுக் கொள்ள முடியும். இதற்கான NHQ/CD/TR/21/01 மற்றும் NHQ/CD/TR/21/02 ஆகிய படிவங்கள பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

புனித ஜோன் அம்பியுலன்ஸ் நிறுவனத்தினதும் தமது பாடசாலையினதும் கௌரவம் காப்பாற்றப்படும் விதத்தில் நடந்து கொள்ளுதல் அத்தியாவசியமென்பதுடன் தமது பொறுப்புமாகும்.

கடுமையான அப்பியாசங்களுடனான பயிற்சிகளில் கலந்து கொள்ளும் போது அதற்கு இசைவான வைத்திய சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

**7. அங்கத்துவத்தை இற்றைப்படுத்துதல் :**

வருடத்திற்கு ஒரு முறை மாவட்ட ரீதியில் முக்கிய அம்சங்கள் உள்ளடக்கப்பட்ட பயிற்சி ஒன்றை அங்கத்தவர்களுக்காக நடாத்தி அங்கத்துவத்தை மேம்படுத்துதல். பயிற்சியில் கலந்து கொள்ளும் அங்கத்தவர்களின் பெயர் பட்டியல் ஒன்றை தயாரித்து மாவட்டத்தில் வைத்துக் கொள்வதுடன் அதன் பிரதி ஒன்றை பிரதான காரியாலயத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

முதலுதவி சான்றிதழில் ஒப்பமிடுவதற்கு மாவட்ட உத்தியோகத்தர்களுக்கு அனுமதி இல்லை. 03 ஆண்டுகள் பூர்த்தி அடைவதற்கு முன்பாக சான்றிதழை பிரதான காரியாலயத்திற்கு அனுப்பி அடுத்த 03 ஆண்டுகளுக்காக புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.

**8. கையடக்க தொலைபேசி மற்றும் தொழில்நுட்ப கருவிகள் :**

கெடெட் அங்கத்தவர்கள் பயிற்சிகளிலும் சேவைகளிலும் ஈடுபடும்போது கையடக்க தொலைபேசி பாவனைக்கு அனுமதி இல்லை. பெற்றோருக்கு அவசர தேவை ஏற்பட்டால் பொறுப்பதிகாரியின் தொலைபேசிக்கு அழைப்பு விடுக்கலாம்.

**9. நிதி தொடர்பான செயல்பாடுகள் :**

நிதி தொடர்பான அனைத்து செயல்பாடுகளும் இயன்றளவு பெற்றோர் குழுக் கூட்டம் மூலமாக நடைமுறை படுத்தப்பட வேண்டும். பேற்றோர் குழுக் கூட்டத்தினால் அமுல் படுத்த வேண்டிய ஆகக் கூடிய அறவீடுகள் பின்வருமாறு

1. கிட்டி, கெடெட் பதிவுப் புத்தகம் (Kitty & Cadet Record Book) - 50.00 ரூபாய்.
2. சத்தியப்பிரமாண வைபவத்திற்காக - 300.00 ரூபாய்
3. ஒரு நாள் பாசறை - 300.00 ரூபாய்
4. வதிவிட பாசறை - 600.00 ரூபாய்

Check updated prices for 2024

நிதி தொடர்பான மேலதிக விபரங்கள் தேவைப்படுமாயின் பிரதான காரியாலயத்திலிருந்து பெற்றுக் கொள்ள முடியும். உத்தியோகத்தர்களினதும் நிறுவனத்தினதும் கௌரவம் காப்பாற்றப்படும் விதமாக நிதி ஒழுக்கக் கட்டுப்பாட்டை பேணுதல் மாவட்ட ஆணையாளரின் பொறுப்பாகும்.

## 10 மாவட்ட உத்தியோகத்தர்கள் :

ஒவ்வொரு வருடத்திலும் ஜனவரி மாதம் 1ம் திகதி அவ் வருடத்திற்கான மாவட்ட ஆணையாளர்களின் பெயர் பட்டியல் வெளியிடப்படும். பிரதான காரியாலயத்தில் அல்லது www.stjohnsl.org இணையத்ளத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

## 11. உத்தியோகத்தர்களுக்கு உள்ள அதிகாரங்களும் பொறுப்புகளும் :

மாவட்ட ஆணையாளர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களின் பதவிகளின் ஆழுமை புனித ஜோன் அம்பியுலன்ஸ் அங்கத்தவர்கள் மத்தியிலும் எமது நிறுவனத்திலும் மட்டுமே என்பதை கருத்தில் கொள்ள வேண்டும். ஆசிரியர்களுக்கும் அதிபர்களுக்கும் இயன்றளவு மதிப்பளித்து செயல்பட வேண்டும். உங்களது நடவடிக்கைகள் மூலம் எங்கள் நிறுவனத்தைப் பற்றி அவர்களின் நன் மதிப்பு கிடைக்கும்.

அதிபரின் அனுமதியின்றி எமது உத்தியோகத்தர்களுக்கு பாடசாலைகளுக்கு செல்வதற்கு அனுமதி இல்லை. மாணவர்கள் தொடர்பான அனைத்து செயல்பாடுகளும் குழுவிற்கு பொறுப்பான ஆசிரியரின் அனுமதியுடன் மட்டுமே அமுல் படுத்தப்பட வேண்டும்.

அனுமதியுடன் பாடசாலைகளுக்கு செல்லும் போது சீருடை அணியாத எல்லா சந்தர்ப்பங்களிலும் பாடசாலையின் சட்ட திட்டங்களுக்கு அமையும் படியும், எமது நிறுவனத்தின் கௌரவம் காப்பாற்றப்படும் விதத்திலுமான உடைகளை அணிய வேண்டும். பாடசாலை நேரத்தின் பின்பு புனித ஜோன் அம்பியுலன்ஸ் செயல்பாடுகள் பாடசாலைக்கு அறிவிக்காமல் நடாத்த அனுமதி இல்லை.

## 12. கல்வித் திணைக்களத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளுதல் :

கல்வித் திணைக்களத்தின் உத்யோத்தர்களான இணைப் பாட விதான மற்றும் ஆரம்ப கல்வி பணிப்பாளர்களை எமது நிறுவன செயல்பாடுகளை மேற்பார்வை செய்யும் அதிகாரிகளாக நியமிக்க தேசிய மட்டத்தில் அறிவித்து மாகாண மற்றும் வலைய காரியாலயங்களில் நியமனம் செய்து கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்படியான நியமனங்கள் கிடைத்திருக்கும் போது அவ் உத்தியோகத்தர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி எமது நிகழ்ச்சிகளை மிக வெற்றிகரமாக நடாத்துவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

## வருடாந்த வேலைதிட்டம் மற்றும் அறிக்கைகள்

பாடசாலை தொடர்பான நிகழ்ச்சிகளின் போது கல்வித் திணைக்களத்தின் தேவைக்கு ஏற்ற விதத்தில் இவ் அறிக்கைகள் தயாரிக்கப்பட வேண்டும். இவ் அறிக்கைகள் தயாரித்தல் பற்றி மாவட்ட ஆணையாளர்கள் தெரிந்திருத்தல் வேண்டும். அத்துடன் இவ் அறிக்கைகளில் குறித்த ஆசிரியர்கள் பற்றிய விபரங்கள் உள்ளடக்கப்பட்டு வலைய மற்றும் மாகாண கல்விக் காரியாலயங்களுக்கு வருடாந்தம் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

மாணவர்களின் செயல்பாடுகளுக்காக சுயேச்சையாக, ஈடுபாடுடன் செயல்லாற்றும் ஆசிரியர்களை இயன்ற எல்லா சந்தர்ப்பங்களிலும் உத்தியோக பூர்வமான கௌரவிப்பைப் பெற்றுக் கொடுப்பதற்கு முயற்சியெடுக்க வேண்டும்.

# சத்தியப்பிரமாணம்

## கெடெட் அங்கத்தவராவதற்கு செய்யப்பட வேண்டிய சத்தியப்பிரமாணம்

முழு மனித குலத்தின் நன்மை மற்றும் கௌரவத்தை அடிப்படையாகக் கொண்டு கருணை, அன்பு, இரக்கம் என்பவற்றினால் இயங்கிவரும் புனித ஜோன் அம்பியுலன்ஸ் படையின் சட்ட திட்டங்களுக்கு அமைய முதலுதவி தொடர்பாக நடாத்தப்பட்ட அடிப்படை அறிவினை அடையும் பரீட்சையில் சித்தியடைந்து தகைமை பெற்றுள்ள நான் இலங்கை புனித ஜோன் அம்பியுலன்ஸ் படையில் இணைந்து வினைத்திறனுடன் இன, மத, குல, அரசியல் பேதங்களின்றி எனது நாட்டிற்கு விசுவாசமுடைவனாக இருப்பேன் எனவும், மனித குலத்திற்கு நேர்மையுடன் சேவை புரிவேன் எனவும் உளப்பூர்வமாகவும், கௌரவத்துடனும் உறுதியளிக்கின்றேன்.

சிருடை அணிந்த உததியோகத்தர் ஒருவரினால் இந்த சத்தியபிரமாணம் வாசிக்கப்பட வேண்டியதுடன் புதிய அங்கத்தவர்கள் சீருடை அணிந்து இடது கையில் ஓர் விளக்கை ஏந்திக் கொண்டு வலது கையை முன்னோக்கி நீட்டியவாறு சத்தியபிரமாணம் செய்துகொள்ள வேண்டும். இந்த விதத்தில் சத்தியபிரமாணம் செய்த பின்னரே ஒருவர் அங்கத்தவராக நியமனம் பெறுவார்.

## புனித ஜோன் கெடெட் - நடாத்தப்பட வேண்டிய நிகழ்ச்சிகள்

**A முதலுதவி தொடர்பான பயிற்சியினை புதுப்பித்தல்**

### A 1.1. அடிப்படை முதலுதவி பயிற்சியினை புதுப்பித்தல்

செயல்முறை பயிற்சிகளுக்கு முக்கியத்துவம் செலுத்தி, அத்தியாவசியமான தலைப்புகளை தெரிவு செய்து மீள ஞாபகப்படுத்துதல்.

### A 2.2. உயர்தர முதலுதவி பயிற்சி Advanced First aid training

1. அதிக அளவில் காணக்கூடிய நோய்த் தன்மைகள் பற்றி அறிவியல் ரீதியான அடிப்படை அறிவை பெற்றுக் கொடுத்தல்.
2. திடீர் அனர்த்த முகாமைத்துவம் பற்றி பயிற்சி அளித்தல்.
3. உபகரணங்களை பாவித்து நோயாளரை கொண்ட செல்லுதல் பற்றிய பயிற்சி அளித்தல். Stretcher, Spinal Board
4. முள்ளந்தண்டு உடைந்த நோயாளரை கொண்டு செல்லுதல்.
5. அவசரமான சந்தர்ப்பங்களில் நோயாளருக்கு பயன்படுத்தும் உபகரணங்கள் பற்றிய அறிவை பெற்றுக் கொடுத்தல்.

   AMBU Bag பாவிக்கும் விதம்
   AED பாவிக்கும் விதம்
   Oxygen பெற்றுக் கொடுக்கும் அடிப்படை முறைகள்
   Inflatable Splints பாவிக்கும் விதம்
   Nebulizers / Inhalers பாவிக்கும் விதம்

6. புண்களுக்கு மருந்து போடும் போதுள்ள அடிப்படை காரணங்கள் மற்றும் மருந்து போடும் விதம்.

7. சுருள் கட்டுத் துணி பாவிக்கும் விதம்.

8. இறந்துபோன ஒருவர் தொடர்பாக முதலுதவியின் போது செய்ய வேண்டியவை.

பயிற்சியின் முடிவில் எழுத்து, மற்றும் செயல் முறை பரீட்சை நடாத்தப்பட வேண்டும்.

சித்தியடைவோருக்கு மட்டும் சான்றிதழ் வழங்குதல்.

தகைமை : ஆகக் குறைந்தது 6 மாதங்கள் அங்கத்தவராயிருத்தல்

பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

## A 3.3 முதலுதவி சேவை செய்வதில் திறமை பெறுதல்
## First aid duty competency certificate

1. மக்களுக்கு முதலுதவி சேவைகள் வழங்குதல் தொடர்பான புனித ஜோன் அம்பியுலன்ஸ் படையில் உள்ள சட்ட திட்டங்கள் பற்றிய அறிவைப் பெற்றுக் கொடுத்தல்.

2. மக்கள் மத்தியில் முதலுதவியாளராக செயல்படும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய மற்றும் பாதுகாப்பாக இருக்க வேண்டிய காரணங்கள் பற்றிய அறிவை பெற்றுக் கொடுத்தல்.

3. குழுவாக சேர்ந்து செயல்படும் விதம் பற்றிய, மற்றும் பொறுப்புணர்ச்சி பற்றிய அறிவை பெற்றுக் கொடுத்தல்.

4. தன்னுடையதும் பிறருடையதும் பாதுகாப்பை ஏற்படுத்திக் கொள்ளும் விதம் பற்றிய அறிவை பெற்றுக் கொடுத்தல்.

5. முதலுதவி சேவைகள் செய்யும் இடங்களில் தொந்தரவு செய்யும் நபர்களிடமிருந்து தம்மை பாதுகாத்து கொள்ளும் விதம் பற்றிய, மற்றும் தேவைப்படுமாயின் புகார் செய்யும் விதம் பற்றிய அறிவை பெற்றுக் கொடுத்தல்.

6. முதலுதவி சேவைகள் செய்யும் போது பயன்படக் கூடிய அடிப்படை சட்ட திட்டங்கள் பற்றிய அறிவை பெற்றுக் கொடுத்தல்.

7. அவசரமான நிலைமைகளின் போது அழைக்க வேண்டிய நிறுவனங்கள், அந் நிறுவனங்களிலிருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய உதவிகள் பற்றிய அறிவை பெற்றுக் கொடுத்தல்.

## முதலுதவி சேவை புரிவதில் திறமை பெறுதல்
## First aid duty competency certificate

ஆகக் குறைந்தது 4 மணித்தியாலங்களாவது பயிற்சியை நடாத்தி இறுதியில் பரீட்சை நடாத்தப்பட வேண்டும்.
தகுதி பெற்றவர்களுக்கு மட்டும் சான்றிதழ் வழங்குதல்.

தகைமை : 1. 12 மாதங்களுக்கு குறையாது அங்கத்தவராயிருத்தல்.
2. பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.
3. 30 மணித்தியாலங்கள் முதலுதவி சேவை செய்திருத்தல்.

## A 4.4 நோயாளரைப் பராமரித்தல் பற்றி அடிப்படை திறமை பெறுதல்
## Caring for the sick - Basic Module

1. நோய் காரணிகள் மற்றும் நோய்களை வகைப் படுத்துதல்.
2. கிருமிகள் பரவும் விதம் / கிருமிகளை அழித்தல்.
3. நோய் எதிர்ப்பு சக்கி மற்றும் நோய் தடுப்பு முறைகள்.
4. நோயாளர் ஒருவரை பரிசோதிக்கும் விதம்.
5. நோயாளர் ஒருவருக்கு அதிகமாக செய்யும் பரிசோதனைகள்
6. நோயாளர் பராமரிப்பின் போது கவனத்தில் கொள்ள வேண்டிய பிரதான காரணங்கள்.
    1. நோயாளர் மற்றும் சூழல்
    2. மனநிலை, கருத்து தெரிவித்தல், உளத்தாக்கத்தை வெளியிடுதல்
    3. ஓய்வு, நித்திரை, விநோதம்
    4. பொதுவான சுத்தம்
    5. உணவு
    6. கழிவுகள் (சிறுநீர் அடைப்பு / சிறுநீர் தொற்று / மலச்சிக்கல்)
    7. மருந்து பாவனையில் உள்ள அடிப்படை சித்தாந்தங்கள் / க்ளினிக் மற்றும் நோயாளரை ஏற்றுக் கொள்ளுதல்
    8. உடற் பயிற்சி மற்றும் அசைவுகள் / படுக்கைப் புண் வராமல் பாதுகாத்தல்
    9. நோயாளரும் குடும்பத்தாரும்
    10. பிரிவும் (மரணம்) பிரதிபலிப்புகளும்

**செயல் முறையான பயிற்சி :**

1. வெப்பமானி பயன்படுத்தும் விதம் / குருதி அமுக்கத்தை பரிசோதித்தல்
2. நோயாளரின் படுக்கையை தயார் செய்தல் / வெவ்வேறு நிலைகளில் நோயாளரை வைத்தல் / நோயாளரை கழுவுதல், குளிப்பாட்டுதல்
3. சீனி மற்றும் அல்பியுமின் என்பவற்றிற்கான சிறுநீர் பரிசோதனை
4. சுரள் கட்டுத்துணி பாவனை
5. அதிக அளவில் செய்யப்படும் பரிசோதனை அறிக்கைகள், உபகரணங்கள், மற்றும் மருந்து வகைகள் பற்றிய அறிவைப் பெற்றுக் கொடுத்தல்

பயிற்சி காலம் 03 நாட்கள் (ஆகக் குறைந்தது 21 மணித்தியாலங்கள்)

பரீட்சை 01 நாள்

பயிற்சி முடிவில் எழுத்து மற்றும் செயல்முறையான பரீட்சை நடாத்தப்பட வேண்டும்.

தகுதி பெற்றவர்களுக்கு மட்டும் சான்றிதழ் வழங்குதல்.

**தகைமை :**

1. 18 மாதங்களுக்கு குறையாது அங்கத்தவராயிருத்தல்
2. பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்
3. 40 மணித்தியாலங்கள் முதலுதவி சேவை செய்திருத்தல்
4. உயரதர முதலுதவி பயிற்சியை நிறைவு செய்திருத்தல்

## B வாழ்க்கை திறமை தொடர்டபான பயிற்சி Life Skills Training

| | | | |
|---|---|---|---|
| B 1 | தலைமைத்துவம் மற்றும் தொடர்பாடல் | Leadership & Communication Skills | 04 H |
| B 2 | குடும்ப மற்றும் சமூக பொருளாதாரம் | Home Economy | 02 H |
| B 3 | வீட்டில் செய்து கொள்ளக் கூடிய சிறிய திருத்த வேலைகள் | Minor Home Repairs | 04 H |
| B 4 | தொழில் நுட்ப உபகரண பாவனையும் முகாமைத்துவமும் | High tech usage | 02H |
| B 5 | சிறு பராயம் முதல் ஆரோக்கியமான வாழ்க்கை முறை | Healthy life style from the childhood | 03 H |

## C பாதுகாப்பு மற்றும் கவனமாக செயலாற்றுதல் தொடர்பான பயிற்சி Safety Training

| | | | |
|---|---|---|---|
| C 1 | நீரில் பாதுகாப்பு | Water safety | 04 H |
| C 2 | நெருப்பில் பாதுகாப்பு | Fire safety | 02 H |
| C 3 | வாகன மற்றும் வீதி தொடர்பான பாதுகாப்பு | Road safety | 03 H |

## D அணிவகுப்பு / மரியாதை செலுத்துதல் மற்றும் உடற் பயிற்சி

| | | | |
|---|---|---|---|
| D 1 | அடிப்படை உடற்பயிற்சி அணிவகுப்பு மற்றும் மரியாதை செலுத்துதல் தொடர்பான பயிற்சி | Basic drill Training | 14 H |
| D 2 | சீருடை பற்றிய அடிப்படை அறிவு | Dress Regulations | 02 H |
| D 3 | சீரான கொண்ணிளை (இருக்கைகளில் அமரும்போது, பாரங்களைத் தூக்கும்போது கவனத்தில் கொள்ள வேண்டியவை) | Ergonomics | 03 H |
| D 4 | உடற் பயிற்சி | Physical Exercises | 12 H |

## சிறப்பு மிகுந்த கெடெட் SUPER CADET AWARD

1. செயலாற்றும் அங்கத்தவராக 05 ஆண்டுகள் இயங்கி வருதல்.
2. A 1 முதல் A 4 வரை அனைத்து நிகழ்ச்சிகளையும் பூர்த்தி செய்திருத்தல்.
3. B 1 முதல் B 5 வரை உள்ள நிகழ்ச்சிகளில் 03 நிகழ்ச்சிகளை பூர்த்தி செய்திருத்தல்.
4. C 1 முதல் C 3 வரை அனைத்து நிகழ்ச்சிகளையும் பூர்த்தி செய்திருத்தல்.

5. D பிரிவில் உள்ள அனைத்து நிகழ்ச்சிகளையும் பூர்த்தி செய்திருத்தல்.
6. முதலுதவி சேவைகள் ஆகக் குறைந்தது 60 மணித்தியாலங்கள் பூர்த்தி செய்திருத்தல்.
7. 03 நாள் வதிவிட பாசறையில் பங்கேற்றிருத்தல்.
8. தேசிய முதலுதவி சேவை ஒன்றிலாவது பங்கேற்றிருத்தல்.
9. ஒழுக்கக் கேடான எந்த ஒரு செயலிலும் ஈடுபடாமை.
10. கெடெட் அறிக்கை புத்தகம் மற்றும் ஏனைய எழுத்தாவணங்களை முறையாக இற்றைப் படுத்தியிருத்தல்.

## தெரிவு செய்தல்

தகுதியுள்ளவர்களைத் தெரிவு செய்தல் பிரதான ஆணையாளரினால் நியமிக்கப்படும் ஓர் குழுவினால் நடாத்தப்படும். மாவட்ட ரீதியான விண்ணப்பப் படிவங்கள் தேசிய காரியாலயத்திற்கு அனுப்பப்பட வேண்டும். வருடத்தில் ஒரு முறை மட்டும் விண்ணப்பங்கள் கோரப்படும். ஒவ்வொரு ஆண்டிலும் பெப்ரவரி மாதம் 15ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும். தகைமை பெற்றவர்களுக்கு தேசிய காரியாலயத்தினால் சின்னமும் சான்றிதழும் வழங்கப்படும்.

## விசேட கெடெட் விருது SPECIAL CADET AWARD

இந்த விருது மிகவும் விசேடமான சந்தர்ப்பங்களில் வழங்கப்படும். தகுதியுள்ளவர்களைத் தெரிவு செய்தல் பிரதான ஆணையாளரினால் நியமிக்கப்படும் ஓர் குழுவினால் நடாத்தப்படும். பலவேறு சிரமங்களுக்கு மத்தியில், முதலுதவி வழங்கி உயிரைக் காப்பாற்றுதல் போன்ற விசேட சந்தர்பங்களில் மட்டுமே இவ் விருது வழங்கப்படும்.

விருது வழங்கும் நிகழ்ச்சி இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை தேசிய காரியாலயத்தினால் நடாத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## குழு பொறுப்பாசிரியர்களை பாராட்டிற்கு உற்படுத்துதல்

பாடசாலை மட்டத்தில் எமது செயல்பாடுகள் வெற்றியடைய வேண்டுமாயின் குழு பொறுப்பாசிரியர் (Divisional Officer) ஈடுபாடுடன் செயல்பட வேண்டும். இப்படி ஈடுபாடுடன் செயல்படும் ஆசிரியர்களின் செயல் திறன் மதிப்பீடு இரண்டு வருடத்திற்கு ஒரு முறை நடாத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## செயல் திறன் மதிப்பீட்டு சான்றிதழ் Perfomance Efficiency Award

ஒவ்வொரு ஆசிரியரும் பெற்றக் கொடுத்த ஒத்துழைப்பை எமது நியதிகளுக்கேற்ப தரக்கணிப்பீடு செய்து அதற்கேற்ப தரப்படுத்தி, தரத்திற்கு ஏற்ப சான்றிதழ் வழங்கப்படும். அத்துடன் அவர் பெற்றுக் கொண்ட மதிப்பீட்டு சான்றிதழின் பிரதியொன்று உரிய கல்விக் காரியாலயத்திற்கு அனுப்பி வைக்கப்படும். விசேட வைபவமொன்றின் போது அந்த சான்றிதழ் அவருக்கு வழங்கப்படும்.

**விசேட செயல் திறன் மதிப்பீட்டு சான்றிதழ் மற்றும் பதக்கம்**
**Best Divisional Officer Award**

முன்பு குறிப்பிட்ட எமது நியதிகளுக்கேற்ப இலங்கை முழுவதிலும் உள்ள குழு பொறுப்பாசிரியர்களை (Divisional Officers) தரக்கணிப்பீடு செய்து அதில் உயர் தரத்தைப் பெறும் ஆசிரியரிகளுக்கு மட்டும் வழங்கப்படும் விருது ஆகும்.

தீர்மாணிக்கப்பட்ட தரத்தை பெற்றுக் கொள்ளும் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும்.

**விசேட குழுவிற்கான விருது – பாடசாலை குழுக்களுக்கானது**
**Best Division Award**

முன்பு குறிப்பிட்ட எமது நியதிகளுக்கேற்ப ஆகக் கூடிய புள்ளிகள் பெரும் 03 பாடசாலைகளுக்கு விருதுகள் வழங்கப்படும். ஒரு மாவட்டத்தில் 02 பாடசாலைகளை இவ் விருதிற்காக சமர்ப்பிக்க முடியும்.

பிரதான ஆணையாளரின் தலைமையில் இயங்கும் குழுவினால் இத் தெரிவு நடாத்தப்படும்.

இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடாத்தப்படும் புனித ஜோன் அம்பியுலன்ஸ் படையின் சேவைகளுக்கான தேசிய விருது வழங்கும் வைபவத்தில் இவ் விருதுகள் வழங்கப்படும்.

**Tamil Translation ( Original document in issued in Sinhala )**

**Commissioner**
**St John Ambulance Sri Lanka**